2013 ஏப்ரல் 19] [திரு. எம். ஆறுமுகம்]

செயல்படுவதைத் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க மத்திய அரசாங்கத்தைத் தமிழக அரசு மீண்டும் வலியுறுத்துமா எனக் கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கேரள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான ஓர் உத்தரவை எங்களுக்கு இட்டிருக்கிறார்கள். அதன்படி, விரைவிலே பேச்சுவார்த்தை நடத்தப்படும். பேச்சுவார்த்தையிலே நல்ல முடிவு ஏற்படும். அப்படி முடியாவிட்டால், மீண்டும் உச்ச நீதிமன்றத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அணுகுவதற்கு நேரம் ஒதுக்கியுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

5. அறிக்கைகள் அளித்தல்

பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், திரு. ச. இராமச்சந்திரன், பொதுக் கணக்குக் குழுத் தலைவர் அவர்கள்.*

திரு. ச. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012–2013 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் தொன்னூற்று ஒன்று முதல் நூறு வரையிலான பத்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

6. மானியக் கோரிக்கைகள், 2013–2014, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

கோரிக்கை எண் 27 – தொழில் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2013–2014 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 27–தொழில் துறை. மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*